# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்
# இடைகால மனு எண் 2/2019 ல்
# அசல் வழக்கு எண்.13/2015

2019 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17-ம் நாள் வியாழக் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய மா.சா.1 அபுல்கலாம் ஆசாத் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஓ.எஸ். 13/2015 வழக்கில் வாதி 50% சொத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள். நான் எனக்கு 90 சதவீதமும், வாதிக்கு 10 சதவீதமும், தர வேண்டும் என்று எதிர் வழக்காடினேன். சமரச தீர்ப்பில் வங்கி கடனை இருவரும் தீர்க்க வேண்டும் என்றும், 42 லட்சம் எனக்கு தனிப்பட்ட முறையில் வாதி கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பானது. சமரச தீர்ப்புப்படி வாதி நடக்காததால் நான் இம்மனுவை தாக்கல் செய்திருக்கிறேன். சமரச தீர்ப்பில் தனிப்பட்ட முறையில் வாதி எனக்கு ரூபாய் 42 லட்சம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு பகரப்படவில்லை என்றாலும், பொது சொத்தை விற்றுதான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்காக பதில் அறிவிப்பு கொடுத்த வழக்கறிஞரின் பெயர் திருச்சியை சேர்ந்த உமர் பாருக் ராஜா. சமரச தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு அதேபோல் வழக்கறிஞர் உமர் பாருக் ராஜாவை வைத்து பதில் அறிவிப்பு கொடுத்தேன். பதில் அறிவிப்பில் ஒரு இடத்தில் ரூபாய் 42 லட்சம் வாதி செலுத்தவில்லை என்றும், மற்றொரு இடத்தில் உங்கள் பகுதி பணத்தை கொடுக்காமல் அறிவிப்பு கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் பதில் அறிவிப்பை பார்த்தால்தான் சொல்ல முடியும். ஒவ்வொரு முறையும் வாதியிடமிருந்து ரூபாய் 42 லட்சம் வரவேண்டும் என்று நான் கட்சி செய்வதால்தான் வாதி இறுதிநிலை தீர்ப்பாணைக்காக மனு தாக்கல் செய்ய வேண்டியிருந்தது என்றால் சரியல்ல. நான் மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டேன். வாதி அவருடைய பகுதியை நிறைவேற்றாததால் நான் உயர்நீதிமன்றத்தை அனுகினேன். 2019 ல் நான் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு எண்

1920/2019 என்ற மனுவில் நான் சொன்னது போல் சமரச தீர்ப்பை வாதி செயல்படுத்த வேண்டும் என்று கோரி நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).